**S.C. No.125/2018**

**எதிரிகள் 1, 2,5 முதல் 8 ஆஜர். 4வது ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, 3வது எதிரி இறந்துவிட்டார்.**

**அ.சா.14 திரு. கிருஷ்ணமூர்த்தி**

**தேதி-19.03.2024**

**மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு இன்று அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**1, 2 மற்றும் 4 முதல் 7வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

இந்த வழக்கிற்கு எதிர் வழக்காக தெள்ளார் காவல் நிலைய குற்ற எண்.205/ 2011, இ.த.ச. சட்டப்பிரிவுகள் 147, 323, 294(பி) படி வழக்கு பதிவு செய்திருந்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது மேற்கண்ட குற்ற எண்ணுக்கான முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். மேற்கண்ட முதல் தகவல் அறிக்கை **எ.சா.ஆ.2-** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

6வது எதிரி கன்னியம்மாள், க/பெ. மாரிமுத்து என்பவரின் புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், அந்த புகார் என்னிடம் காட்டப்படுவது தான். புகார் **எ.சா.ஆ.3**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. மாரிமுத்து, ராதா, தனலட்சுமி, கன்னியம்மாள் ஆகியோர்களுக்கு அடிப்பட்டு சிகிச்சைக்கு வந்ததாக மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைக்கப் பெற்றது என்றால் சரிதான்.

அந்த தகவலின் அடிப்படையில் நான் கன்னியம்மாள் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். என்னுடைய புலன் விசாரணையின் பகுதியாக மேற்கண்ட அடிப்பட்ட நபர்களின் விபத்து பதிவேடுகளை பெற்று விசாரணை செய்தேன்

என்றால் சரிதான். மேற்படி அடிப்பட்ட நபர்களின் விபத்து பதிவேடுகள் எண்ணிக்கை - 4 வழக்கில் கோப்பில் உள்ளது தான் என்றால் சரிதான். அவை முறையே **எ.சா.ஆ.4** முதல் **எ.சா.ஆ.7** வரையிலான ஆவணங்களாக குறியீடுச் செய்யப்படுகிறது.

மேற்படி விபத்து பதிவேடுகளில் காயம்பட்ட நபர்களை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைக்க சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், செங்கல்பட்டுவிற்கு சென்றார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. வழக்கின் கோப்பினை நான் எப்போது ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை, வேறு பணி எனக்கு கொடுக்கப்பட்டதால் மற்ற விவரங்கள் எதுவும் இந்த வழக்கை பற்றி எனக்கு தெரியாது. 10.08.2011 என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை.

எதிர் வழக்கில் இந்த வழக்கின் சாட்சியான செல்வராஜை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததற்கான காவல் அடைப்பு அறிக்கை என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சரிதான். காவல் அடைப்பு அறிக்கை சான்றிட்ட நகல் **எ.சா.ஆ.8**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. எ.சா.ஆ.8ல் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிர் வழக்கு எப்படி முடிக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின் அடிப்படையில் குற்ற எண்.205/ 2011ஆனது சங்கதிகளின் அடிப்படையில் தவறானது என்று முடிக்கப்பட்டது என்றால் ஆவணத்தின் படி அப்படி தான் உள்ளது. இறுதி அறிக்கை **எ.சா.ஆ.9**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. ஆனால் நீதிமன்றத்தில் காலவரையின் கீழ் முடிக்கப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தின் படி அப்படி தான் உள்ளது. நீதிமன்ற உத்தரவு **எ.சா.ஆ.10**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றால் சரிதான். மாதிரி வரைபடம் **எ.சா.ஆ.11**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. எ.சா.ஆ.11ல்

ச்ர்வே எண் குறித்த குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கைப்படி, குற்ற எண்.205/2011ல் எதிரிகளாக காட்டப்பட்டவர்கள் செல்வராஜ், மகாலிங்கம், குமாரி, முருகன், லட்சுமிதேவி மற்றும் சிலர் என்றால் சரிதான்.

நான் இந்த வழக்கில் சாட்சிகளை எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் 01.08.2011 அன்று செல்வராஜ், குமாரி, மகாலிங்கம், லட்சுமிதேவி ஆகியோர்களை விசாரித்தேன். 01.08.2011 அன்று பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களை 16.08.2011 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் அடிதடி வழக்கு விசாரணையை முடித்து மேல் விசாரணைக்கு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தது மட்டும் எனக்கு தெரியும்.

இந்த வழக்கில் இறந்த கண்ணனின் இறப்பு குறித்த தகவல் காவல் நிலையத்திற்கு 09.08.2011 அன்று தான் தெரியவந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 01.08.2011 அன்றே என் விசாரணையை முடித்து ஆய்வாளர் பார்வைக்கு வைத்துவிட்டேன் என்றால் சரிதான்.அதன் பிறகு நான் வேறு யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 09.08.2011 அன்று கண்ணன் இறந்தது குறித்து எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தும் கண்ணனை ஏன் விசாரிக்கவில்லை என்று எனக்கு சார்ஜ் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது, அதற்கு நான் விளக்கம் கொடுத்தேன்.

ஆய்வாளர் விளக்கத்தில் என்னை சொன்னதால் நான் 02.08.2011 அன்று சார்ஜ்ஜிலிருந்து தப்பிக்க வேண்டி கண்ணனை விசாரித்தது போல் ஒரு வாக்குமூலம் பதிவு செய்து 16.08.2011 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் கண்ணனை நான் விசாரித்தேன், அப்போது அவரால் பேச முடியாததால் கூட இருந்தவர் அவர் சொன்னதை சொல்ல நான் பதிவு செய்தேன். உடனிருந்தவர் பற்றிய குறிப்பு என்னுடைய விசாரணை பதிவில் மேற்குறிப்பு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

/0/

( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.